## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2020

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2020), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சட்டமுன்வடிவு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை நான் இந்த அவையில் எடுத்து வைக்க விரும்புகிறேன். பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 10–2–2020 அன்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதன்மீது மாநில அரசு பெற்றிருக்கக்கூடிய பதில் என்ன? காவேரி ஆற்றுப்படுகை மண்டலத்திலுள்ள வேளாண் நிலங்களைப் பாதுகாக்க கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய சட்டமுன்வடிவு, ஏற்கெனவே புதியதாக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய 341–க்கும் மேற்பட்ட* Hydro Carbon

---

*@ 20–2–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

*திட்டங்களுக்கு மாநில அரசே அனுமதி வழங்கும் வகையில் இந்தச் சட்டமுனவடிவு அமைந்திருப்பது அதிர்ச்சியளிக்கக்கூடியதாக இருக்கிறது. இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், சட்டமுன்வடிவின் பிரிவு 4 (1)–ல், அட்டவணை 2–ல் உள்ள புதிய திட்டங்கள் மற்றும் புதிய செயல்பாடுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், அடுத்துள்ள பிரிவு 4 (2)*(a) *பிரிவில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, பிரிவு 4 (2)* (b)*–ன்கீழ் உட்கட்டமைப்பு திட்டங்களான துறைமுகம்,* pipelines, *சாலை, தொலைதொடர்பு, எரிசக்தி, குடிநீர் வழங்கல் மற்றும் பயன்பாடுகளுக்கான* other utilities *திட்டங்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதில்* other utilities *என்பதன்கீழ், பெட்ரோல்,* Gas *எல்லாம் வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்? சட்டமுன்வடிவின் நோக்கத்திற்கு எதிராகவே இரு பிரிவுகளை இதில் ஏன் சேர்த்திருக்கிறீர்கள்? தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல* Authority *அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் அரசு நியமிக்கும் உறுப்பினர்களுக்கு எல்லாம் 3 வருடம் என்று கூறிவிட்டு, சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வருடம் மட்டும் பதவிக்காலம் என வரையறுக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? இந்த மண்டலத்திலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு இந்த* Authority*–ல் ஏன் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை?*

*அதுமட்டுமல்ல, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மாவட்ட பட்டியலைப் பார்த்தால் அதில் டெல்டா மாவட்டங்களில் இருக்கக்கூடிய திருச்சி, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் விடுபட்டிருக்கின்றன.*

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *இதற்கு என்ன காரணம்? விவசாயிகளுடைய பிரதிநிதிகள் 3 பேர் நியமிக்கப்படுவார்கள் என்று கூறியிருக்கின்றீர்கள். ஆனால், இவர்கள் இந்த வேளாண் மண்டலத்திற்குள் இருக்கின்றார்களா என்றும் கூறவில்லை. வேளாண் நிலங்களை* plot *போட்டு விற்கின்றார்கள். ஆக, வேளாண் நிலங்களை* real estate *ஆக மாற்றக் கூடாது என்று*